**சுருக்கம்**

கலையும் பண்பாடும் – திருமலை திருப்பதி தேவஸ்தானம் – திருமலை திருப்பதி நவராத்திரி பிரம்மோத்சவம் 2018 – தெய்வீக கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது – செலவினங்களுக்காக ரூ.3,00,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை**

அரசாணை (ப) எண். 36

நாள்: 12–03–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விளம்பி வருடம், மாசி 28

**படிக்கப்பட்டது:-**

1. செயல் அலுவலர், திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி, நேர்முகக் கடித எண் DP6/1073/HDTP/2017, நாள் 25.01.2018
2. இணை செயல் அலுவலர், திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி, நேர்முகக் கடித எண் DP11/2039/HDTP/2017, நாள் 22.03.2018
3. திட்ட அலுவலர் / துணை செயல் அலுவலர், இந்து தர்ம பிரச்சார பரிஷத், திருமலை திருப்பதி தேவஸ்தானம் நேர்முகக் கடித எண் DP11/2039/HDTP/2017, நாள் 28.08.2018
4. கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கடித எண் 2266/இ1/2018, நாள் 03.10.2018 மற்றும் 30.01.2019

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திருமலை திருப்பதி தேவஸ்தானம் சார்பில் நடைபெற உள்ள பிரமோத்சவ விழா 2018 ல் உலகம் முழுவதும் உள்ள பக்தர்களிடம் தமிழக பாரம்பரியக் கலைகளை பரப்பும் வண்ணம் தமிழக கலைக்குழுக்களை அனுப்பி வைத்து தெய்வீக கிராமிய நடனக் கலை நிகழ்ச்சிகளை நடத்தித்தருமாறு திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் செயல் அலுவலர் அரசை கேட்டுக் கொண்டார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திருமலை திருப்பதி தேவஸ்தானம் சார்பில் 10.10.2018 முதல் 18.10.2018 வரை நடைபெறவுள்ள திருமலை திருப்பதி நவராத்திரி பிரம்மோத்சவம் விழாவினை சிறப்பிக்கும் வகையில் அவ்விழாவில் தெய்வீக கிராமிய நடனக் கலை நிகழ்ச்சிகளை நடத்தித் தருமாறு திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் இணை செயல் அலுவலர் அரசைக் கேட்டுக் கொண்டார்.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திருமலை திருப்பதி பிரமோத்சவ விழாவில் நடைபெறும் நிகழ்ச்சிகள் அனைத்தும் இந்திய மற்றும் வெளிநாடுகளில் உள்ள அனைவரும் கண்டுகளிக்கும் வகையில் ஸ்ரீ வெங்கடேஸ்வரா பக்தி சேனல் வாயிலாக நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட உள்ளது எனவும் தெரிவித்து இவ்விழாவில் தெய்வீக கிராமிய நடனக் கலை நிகழ்ச்சிகளை நடத்தித் தருமாறு இந்து தர்ம பிரச்சார பரிசத், திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் திட்ட அலுவலர் அரசை கேட்டுக் கொண்டார்.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், திருமலை திருப்பதி தேவஸ்தானம் சார்பில் 10.10.2018 முதல் 18.10.2018 வரை நடைபெற்ற திருமலை திருப்பதி நவராத்திரி பிரம்மோத்சவம் உற்சவர் திருவீதி வலத்தில் கலை பண்பாட்டுத் துறையின் தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் 12.10.2018 மற்றும் 13.10.2018 ஆகிய இரண்டு நாட்கள் அம்மன் ஆட்டம், காளியாட்டம், இராதை கிருஷ்ணன் ஆட்டம், பம்பை ஆட்டம் ஆகிய தெய்வீக கிராமியக் கலை நிகழ்ச்சிகள் வழங்கியதற்கு கீழே அட்டவணையில் உள்ளவாறு ஏற்பட்ட உள்ளபடியான செலவினங்களுக்காக ரூ.3,00,000/– தொகையினை 2018–2019ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.1 கோடியிலிருந்து நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வழங்குமாறு கலை பண்பாட்டு ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்:-

| வ. எண் | கலை நிகழ்ச்சிகள் | கலைஞர்களின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | கரகாட்டம் | 6 | 35,000/– |
| 2. | காளியாட்டம், அம்மன் கூத்து | 10 | 60,000/– |
| 3. | புலியாட்டம், தாரை, தப்பட்டை | 10 | 60,000/– |
| 4. | தப்பாட்டம் | 10 | 60,000/– |
| 5. | பம்பையாட்டம் | 8 | 50,000/– |
| 6. | நையாண்டி மேளம் | 6 | 35,000/– |
| | மொத்தம் | 50 | 3,00,000/– |

5. கலை பண்பாட்டு ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்து, அதனை ஏற்று, திருமலை திருப்பதி தேவஸ்தானம் சார்பில் 10.10.2018 முதல் 18.10.2018 வரை நடைபெற்ற திருமலை திருப்பதி நவராத்திரி பிரம்மோத்சவம் உற்சவர் திருவீதி வலத்தில் கலை பண்பாட்டுத் துறையின் தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் 12.10.2018 மற்றும் 13.10.2018 ஆகிய இரண்டு நாட்கள் தெய்வீக கிராமியக் கலை நிகழ்ச்சிகள் வழங்கியதற்கு ஏற்பட்ட உள்ளபடியான செலவினங்களுக்காக ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) தொகையினை நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:–

"2205 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினங்கள் – JA கலைப் பணிகளுக்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம் – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
(த.தொ.கு.2205 00 102 JA 0933)

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்க கலை பண்பாட்டு ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேற்காணும் தொகை பட்டுவாடா செய்யப்பட்டமைக்கான பற்றுச்சீட்டுகள், இரசீதுகள், புகைப்பட நகல்கள் மற்றும் செய்தி நறுக்குகளை உரிய பயனீட்டுச் சான்றுடன் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கலை பண்பாட்டு ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.8477/நிதி(கல்வி–II)துறை/2019, நாள் 11.03.2019–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அபூர்வ வர்மா
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (A&E), சென்னை–18.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை–9.
உதவி இயக்குநர்(பொ), மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர்
<u>நகல்:-</u>
நிதி(கல்வி–II)த் துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்–1/பொது) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

12/03/19
பிரிவு அலுவலர்